தேர்வாணையத்தின் செய்தி அறிவிப்பு

2002-2008 ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு மீன் வளத்துறை சார்நிலைப்பணியில் அடங்கிய மீன் வளத்துறை உதவி ஆய்வாளர் பதவிக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், 16.02.2008-ஆம் நாளிட்ட அறிவிக்கை வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இப்பதவிக்கான எழுத்துத் தேர்வு கடந்த 07.06.2008 அன்று முற்பகல் நடைபெற்றது. 20.09.2012 அன்று நடைபெற்ற நேர்காணல்தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியல் கடந்த 05.09.2012 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 20.09.2012 அன்று நடைபெற்ற நேர்காணல் தேர்வில் தவிர்க்க முடியாத / எதிர்பாராத காரணங்களால் கலந்து கொள்ள இயலாதவர்கள், அவ்வாறு கலந்து கொள்ள இயலாததற்கான காரணத்தைக் குறிப்பிட்டு, எண்.1, கிரீம்ஸ் சாலை, சென்னை - 600 006 எனும் முகவரியில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் வரும் 28.09.2012 அன்று முற்பகல் நடைபெறும் நேர்காணல் தேர்வில் கலந்து கொள்ளலாம். அவ்வாறு கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தங்களின் வருகை குறித்த விவரத்தை 27.09.2012க்குள் தேர்வாணையத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்குறித்த நாளில் நேர்காணல் தேர்வில் விண்ணப்பதாரர்கள் வருகை தரத் தவறும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களுக்கு அதன் பின்னர் நேர்காணல் தேர்வில் பங்கேற்க எவ்வித வாய்ப்பும் வழங்கப்படமாட்டாது.

செயலாளர்